MR. CHAIRMAN : Is the hon. Member going to read out any passage?

THIRU K. S. GANAPATHI : Sir, I am going to convey the present position.

MR. CHAIRMAN : Yes, all right.

திரு கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு திங்கள் முதல் நாள் என்ன நிலைமை இருக்கின்றதோ அதைப் பொறுத்துத்தான் இது போன்று ஆசிரியர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்படுகிறது. இப்படி ஆகஸ்டு முதல் நாள் உள்ள நிலை பற்றி அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், உதாரணமாக 1974–75-ஐ எடுத்துக் கொண்டால், 1975 ஜனவரித் திங்களில் தான் இந்த ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பிறகு அதிகாரிகள் நியமனம் செய்வதற்கான நடவடிக்கையில் இறங்குகின்றார்கள். இந்த ஆண்டிலே இதுவரையில் நியமனம் செய்யப்படாமலேயே இருக்கின்றது. பள்ளியே முடிவடையக்கூடிய நிலையில் இனிதான் நியமனம் செய்வது என்பது பயனற்றதாக ஆகிவிடுகின்றது. எனவே, இப்படிப்பட்ட காலத்தாழ்வு ஏற்படுவதைத் தவிர்க்க அரசு இனி என்ன செய்ய இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதுதான் சப்ளிமெண்டரியா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது பற்றி ஆராய்ந்து எந்த அளவிற்குக் காலத்தாழ்வு ஏற்படாமல் தடுக்கலாம் என்று முடிவெடுக்க அரசு முயற்சிக்கும். ஆகஸ்டுக்கு முன்பு எவ்வளவு பேர் இருக்கின்றார்கள், இன்னும் எவ்வளவு பேர் தேவை என்ற எண்ணிக்கைகளையெல்லாம் பார்க்க வேண்டியிருப்பதால் காலத்தாழ்வு ஏற்படுகிறது. காலத்தாழ்வு ஏற்படக் கூடாதுதான். ஏன் இது ஏற்படுகிறது என்பதைக் கண்டறிந்து இப்படிப்பட்ட காலத்தாழ்வு ஏற்படாதிருக்க என்னென்ன முறைகளைக் கையாள வேண்டுமோ அத்தகைய முயற்சிகளைக் கையாளத்தக்க நடவடிக்கைகளை எடுக்க அரசு முயற்சிக்கும்.

Contingent Staff of Aided High Schools

* 174 Q.—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Contingent Staff of Aided High Schools are not governed by any leave rules and that they are expected to avail leave only on loss of pay ; and

(*b*) if so, whether the Government will extend the benefit of the leave rules applicable to the non-teaching staff of the Aided High Schools, to them also?

மானியம் பெறும் உயர்நிலைப்பள்ளிகளைச் சேர்ந்த தற்காலிகப் பணியாளர்கள்.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானியம் பெறும் உயர்நிலைப்பள்ளிகளைச் சேர்ந்த தற்காலிகப் பணியாளர்கள் (Contingent Staff) எவ்வித விடுப்பு விதிகளின் கீழும் வரவில்லை என்பதும், ஊதிய இழப்பு (Loss of pay) அடிப்படையில்தான் அவர்கள் விடுப்பு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றனர் என்பதும் உண்மையா?

(இ) மானியம் பெறும் உயர்நிலைப்பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியரல்லாத பணியாளர்களுக்குப் பொருந்தக் கூடிய விடுப்பு விதிச் சலுகைகளை அவர்களுக்கும் அரசு நீட்டிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, உயர்நிலைப்பள்ளிகளில் 'வாட்டர்மேன், ஸ்வீப்பர்ஸ், ஸ்வீபேர்ஸ்' என்ற அலுவலர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் தற்காலிகப் பணியாளர்கள் என்றுதான் வைக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆனாலும், அவர்கள் தங்கள் காலம் முழுவதும் அதிலேயேயிருந்து ஓய்வு பெறுகின்றார்கள். ஆனால், அவர்களுக்குச் சிறுவிடுப்பு கூட கிடையாது. மற்றவர்களுக்குள்ள 15 நாட்கள் சிறுவிடுப்பு இவர்களுக்குக் கிடையாது. இவர்கள் ஏதாவதொரு நாள் சிறு விடுப்பில் செல்ல வேண்டுமானால், மாற்று ஆள் யாரையாவது வைத்து விட்டுத்தான் செல்ல வேண்டும் என்ற நிலை இருக்கின்றது. இந்த நிலைமைகளை மாற்றுவதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்லும் விடுப்பு போன்றவையெல்லாம் நிலையான பணியாளர்களுக்குத்தான் உண்டு. தற்காலிகமான பணியாளர்களுக்கெல்லாம் அவை கிடையாது என்று இருக்கின்றது. ஆகவே, விடுப்பு போன்றவற்றை இவர்கள் விஷயத்திலே சட்டப்படி அமுல் படுத்த இயலாது. அவர்கள் அவ்வளவு பேரையும் 'ரெகுலரைஸ்' செய்ய வேண்டும் என்ற கோரிக்கை இருந்து வருகின்றது. இதைச் செய்தால் அதனால் ஏற்படும் நிதி—செலவையும் யோசிக்க வேண்டியிருக்கின்றது. அவர்கள் நிரந்தரப் பணியாளர்கள் என்று ஆக்கப்பட்டால், அவர்களுக்குச் சிறு விடுப்பு மட்டுமல்லாமல மற்றச் சலுகைகளையும் கொடுக்க வேண்டும் சட்டதிட்டங்களின்படி. இங்கே மட்டுமில்லாமல் எங்கும் தற்காலிக ஊழியர்கள் விஷயத்தில் அனுசரிக்கப்படும் விதிமுறைதான் இவர்கள் விஷயத்திலும் கையாளப்படுகிறது.

1975 மார்ச் 24]

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, அரசுப் பள்ளிகளில் அதாவது 'பி' வங் பள்ளிகளில் பணிபுரியும் இந்தப் பிரிவு ஊழியர்கள் விஷயத்திலும் இதே நிலைமைதான் இருக்கின்றது. பொதுவாக அவர்கள் நியமனம் செய்யப்பட்ட காலத்திலிருந்து அவர்கள் ஓய்வுக் காலம் வரையில் அவர்கள் இந்தப் பெயரில்தான். தற்காலிக ஊழியர்கள் என்ற பெயரில்தான் இருக்கின்றார்கள். அவர்களுக்கு விடுப்பு போன்ற எந்தச் சலுகைகளும் கிடையாது. இந்த அரசு எவ்வளவோ பிரிவினருக்கு பல சலுகைகளைச் செய்து கொடுத்திருக்கின்றது. அந்த முறையில் இப்படித் தற்காலிகமாகவே உள்ள இந்த 'கண்டின்ஜென்ஸி மீனியல்ஸ்'க்கும் விடுப்பு போன்ற வசதிகளைச் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இது பற்றிய செயற்குறிப்பு இப்போது இல்லை. அது பற்றி ஆராய வேண்டும்.

Integration of the Cadre of 1st and 2nd Class Magistrates with the Cadre of District Munsiffs.

* 175 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether it is a fact that the Second State Conference of the Tamil Nadu State Magisterial Service Association has requested the Government to implement the scheme of integrating the cadre of 1st and 2nd Class Magistrates with the cadre of District Munsiffs and to suspend till then, the recruitment of District Munsiffs by the Tamil Nadu Public Service Commission; and

(b) if so, the action taken thereon?

முதல், இரண்டாவது வகுப்பு குற்றவியல் நீதிபதி பதவிகளை மாவட்ட முன்சீப் பதவிகளுடன் இணைக்கும் திட்டம்.

திரு. கே. எஸ். கணபதி (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முதல், இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் பதவிகளை மாவட்ட முன்சீப் பதவிகளுடன் இணைக்கும் திட்டத்தைச் செயல்படுத்துமாறும், அவ்வாறு செயல்படுத்துகிற வரையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் மாவட்ட முன்சீப்புகளைத் தேர்ந்தெடுப்பதை நிறுத்தி வைக்குமாறும் தமிழ்நாடு மாநில மாஜிஸ்ட்ரேட்டுகள் சங்கத்தின் இரண்டாவது மாநில மாநாடு கேட்டுக் கொண்டுள்ளதா?